RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 182 | ஜூலை.7 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## கீழடி விவகாரத்தில் மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை: சகாயம் விமர்சனம்

சென்னை, ஜூலை.7-

கீழடி விவகாரத்தில் மாற்றாந்தாய் மனப்பாங்கோடு நடந்து கொண்டு வரலாற்றை மறைப்பதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி சகாயம் தெரிவித்தார்.



ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி உ.சகாயம் எழுதிய ‘கடைசித் தறியில் கண்டாங்கிச் சேலை’ எனும் நூல் வெளியீட்டு விழா நாமக்கல் அருகே லத்துவாடியில் நடைபெற்றது. இதில் சகாயம் கலந்து கொண்டு பேசினார். விழாவைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் நடைபெற்ற லாக்கப் மரணம் எந்த சூழலிலும் ஏற்றுக் கொள்ளமுடியாதது. காவல் துறையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் மக்களை பாதுகாக்கத்தான் என்பதை அவர்கள் உணர வேண்டும். இதில் தமிழக முதல்வர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். காவல் துறையினர் அத்துமீறிய செயலை மட்டுப்படுத்த வேண்டும். இதில் கவனம் செலுத்தவில்லையெனில் ஆட்சிக்கு பெரிய அவப்பெயர் வந்துவிடும். தமிழ் மொழி உலகில் உள்ள மூத்த மொழிகளில் ஒன்று.

வட மொழிக்கு அளிக்கும் நிதி உயர்வாக இருக்கும்போது அதில் பாதி கூட தமிழுக்கு நிதி ஒதுக்காததை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே வட மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கும் நிதியைக் காட்டிலும் கூடுதல் நிதியை தமிழ் மொழிக்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டும். தேர்தலை தாண்டி சிந்திப்பது தான் தமிழகத்தின் இன்றைய தேவையாகும். இதன்படி நாங்கள் தேர்தல் அரசியலை தாண்டி தான் சிந்திக்கிறோம். தேர்தலை மிக செலவினமானதாக ஆக்கிவிட்டனர்.

தமிழர்களின் வரலாறு தொன்மையானது. அதன் மகத்தான வெளிப்பாடு தான் கீழடியில் கிடைக்கக்கூடிய வரலாற்று செல்வங்கள். அதை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது.மாற்றாந்தாய் மனப்பாங்கோடு நடந்து கொண்டு வரலாற்றை மறைப்பதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தமிழர்கள் ஏற்கனவே விழிப்புணர்வு உடையவர்கள். எனவே மாற்றாந்தாய் மனப்பாங்கோடு நடப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது” இவ்வாறு சகாயம் பேசினார்.

## சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டம் மினி மாரத்தான் போட்டியை துவக்கிவைத்த பெரியகருப்பன்

சென்னை: ஜூலை.7-

சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் தமிழக அமைச்சர்கள், சென்னை மேயர் ஆகியோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழக கூட்டுறவுத்துறை சார்பில் COOP-A-THON மினி மாரத்தான் போட்டி நேற்று காலை 05.30 மணியளவில் சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது, இப்போட்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

'சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்' மினி மாரத்தானில் பங்கேற்றவர்கள், சென்னை தீவுத்திடலில் இருந்து தொடங்கி வெற்றி போர் நினைவுச்சின்னம், அண்ணா சதுக்கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடைந்தனர், இதில் 18 வயது முதல் 40 வயது உடையவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேற்பட்டவர்கள் என இரு பிரிவாக 2000 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.






ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசாக காசோலை மற்றும் பதக்கத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கி பாராட்டினார். பெண்கள் பிரிவில் முதல், இரண்டாம், மூன்றாம் இடத்தை பிடித்த நபர்களுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு காசோலை மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டினார். பங்குபெற்ற அனைவருக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை சத்யபிரதசாகு இ.ஆ.ப, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தக்குமார் இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்பு பணிகள்) ச.பா.அம்ரித் இ.ஆ.ப., மேயர் திருமதி. ஆர். பிரியா, ஆகியோர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள், உள்ளிட்ட அலுவலர்கள், கூட்டுறவாளர்கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கீழதாயில்பட்டி பட்டாசு ஆலை வெடிவிபத்து உரிய இழப்பீடு வழங்க தேமுதிக வலியுறுத்தல்

சென்னை: ஜூலை.7-

பாதிக்கப்பட்டவர்களுக்கு திமுக அரசு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே கீழதாயில் பட்டியில் உள்ள ஹிந்துஸ்தான் (ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ்) பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்த செய்தி மிகவும் வேதனை அளிக்கிறது. பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்து சுமார் ஒரு மணி நேரமாக வெடித்துச் சிதறி உள்ளது. அருகில் உள்ள பட்டாசு ஆலைக்கும் தீ பரவிய நிலையில் அங்குள்ள பட்டாசுகளும் வெடித்துச் சிதறியுள்ளன.

தேமுதிக சார்பாக விருதுநகர் மாவட்ட கழக செயலாளர் செய்யது காஜா செரிப் மற்றும் கழகத்தினர், சிவகாசி மருத்துவமனைக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறி, மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி பொருட்களை அளிக்க இருக்கிறார்கள். பட்டாசு ஆலையின் உரிமம் ரத்து என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த உரிமம் ரத்து என்பது கண் துடைப்பாக இல்லாமல் இனி வரும் காலங்களில் விருதுநகர் மாவட்டம் மட்டும் இல்லாமல் தமிழ்நாடு முழுவதும் எங்குமே பட்டாசு ஆலை விபத்துக்களோ, உயிர் இழப்புகளோ நடக்காத வண்ணம் அரசு சட்டத்தையும், அரசாணையையும் (நிளி) பிறப்பிக்க வேண்டும்.

பட்டாசு ஆலைகளில் வெடி விபத்து என்பது விருதுநகர் மாவட்டத்திற்கே ஒரு சாபக் கேடாக உள்ளது. தமிழக அரசு பட்டாசு தொழிற்சாலைக்கு என்று தனிக் கவனம் செலுத்தி தமிழகம் முழுவதும் விபத்துகள் நடக்காத வண்ணம் பாதுகாக்க வேண்டும். அப்பாவி மக்கள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து வாழ்வாதாரத்திற்காக பட்டாசு ஆலைகளில் பணிக்குச் செல்கிறார்கள்.

அவர்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற நிலையில் காப்பீடு (insurance), குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். அதேபோல் பட்டாசு ஆலைகளில் நடக்கும் விபத்துகள் இனிமேலும் நடக்காத வண்ணம் பாதுகாத்துக் கண்காணிக்க வேண்டும்.

மேலும் இறந்தவர்களுக்கும், படுகாயம் அடைந்தவர்களுக்கும் தனியார் பட்டாசு (ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ்) ஆலை உரிமையாளர்கள் மற்றும் தமிழக அரசும் உரிய இழப்பீடு வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். இறந்தவரின் ஆன்மா சாந்தியடையவும், அவரது குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் இரங்கலையும், அனுதாபத்தையும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்” என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

## ‘எல்இடி திரைகள் அமைக்கும் திட்டத்தில் பல கோடி கொள்ளையடிக்க முயற்சி’ : திமுக அரசுக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை: ஜூலை.7-

கிராமப்புறங்களில் எல்இடி திரைகள் அமைக்கும் திட்டத்தின்மூலம் பல கோடி ரூபாய் கொள்ளையடிக்க திமுக அரசு முயல்வதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.



இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: 'ஆட்சியில் அமர்வது மக்களுக்கு நன்மை செய்வதற்கு என்ற நிலை மாறி, லஞ்ச லாவண்யத்தில் திளைத்து, தங்களை வளப்படுத்துவதற்காகவே என்ற நோக்கோடு விடியா தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசு கடந்த 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

தங்களது 4 ஆண்டு கால அலங்கோல ஆட்சியினை மூடி மறைக்க, தங்களது ஒவ்வொரு செய்கையையும் நிர்வாகத் திறனற்ற விடியா திமுக ஸ்டாலின் மாடல் அரசு வெற்று விளம்பரங்கள் செய்து வருகிறது. அதன்படி, லேட்டஸ்டாக விடியா திமுக அரசு, தனது வெற்று விளம்பரங்களை தமிழகம் முழுவதும் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,620 ஊராட்சிகளிலும் வெளியிட வேண்டும் என்று, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி மூன்று நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும் என்றும், அதில் மதுரையைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு எல்இடி திரைகளைப் பொருத்தும் பணியை வழங்க வேண்டும் என்றும், அதற்காக 385 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் ஒவ்வொன்றும், சந்தை விலையை விட அதிகமாக, அதாவது அந்நிறுவனத்திற்கு ஒரு எல்இடி திரைக்கு சுமார் ரூ.7.50 லட்சம் என்றும், அதேபோல் தமிழகத்திலுள்ள 12,620 ஊராட்சிகள் ஒவ்வொன்றும் சிறிய வகையிலான எல்இடி திரையை வாங்க சுமார் ரூ.10,000/ வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், பஞ்சாயத்து கிளர்க்குகளும் அந்நிறுவனத்திற்கு உடனடியாக கொள்முதல் ஆணையுடன் எல்இடி திரைக்கான தொகையையும் வழங்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகின்றனர். தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு, கழிவு நீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் அவதியுற்று வருகிறார்கள்.

ஏற்கெனவே 2006-2011 ஆட்சி காலத்தில் தமிழக மக்களுக்கு இலவச தொலைக்காட்சி வழங்கி தங்களது குடும்பத் தொலைகாட்சி நிறுவனங்களின் நிதிநிலையை வளர்த்துக்கொண்டது. ஏற்கெனவே 4 ஆண்டுகளாக வெற்று விளம்பரங்களுக்காக கோடிக்கணக்கில் விளம்பரம் கொடுத்தது போக, ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை செய்து தராமல், அந்நிதியை மடை மாற்றும் விடியா திமுக ஸ்டாலினின் (ஏமாற்று) மாடல் அரசின் கடந்த நான்காண்டு கால நடவடிக்கைகள் வேதனையைத்தான் தந்துள்ளது என்று தமிழக மக்கள் கொதித்துப் போயுள்ளனர்.

இந்நிலையில் 4 ஆண்டு சாதனை என்று பொய்யான செய்திகளை வீடியோக்களாகத் தயாரித்து அதை கிராமங்கள்தோறும் எல்இடி திரைகள் மூலம் ஒளிபரப்பச் செய்து மக்களை ஏமாற்றி விடலாம் என்று ஸ்டாலின் மனப்பால் குடிக்கிறார். 'கமிஷன், கலக்ஷன், கரப்ஷன்' என்பதையே கொள்கையாகக் கொண்டு செயல்படும் ஊழல் மாடல் தி.மு.க. அரசு, எல்இடிதிரை அமைக்கும் திட்டத்தில் பல கோடி கொள்ளை அடிக்க முயல்வது கண்டனத்திற்குரியதாகும்.

மக்களின் வரிப்பணத்தை வீண் விரயம் செய்யும் திட்டத்தை உடனடியாக இந்த அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். நாங்கள் எதுவும் செய்வோம், யாரும் எங்களைக் கேட்க முடியாது என்ற எண்ணத்தில் மக்களின் வரிப் பணத்தை தங்களுடைய சுயநலத்திற்காக செலவிடுவது கண்டிக்கத்தக்கது. அதற்கான விலையை விரைவில் ஏற்படவுள்ள ஆட்சி மாற்றத்திற்குப் பின் தர நேரிடும் என்று எச்சரிக்கிறேன்.' இவ்வாறு இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

## மாட்டுப்பட்டி அணையில் பாராகிளைடிங் சோதனை ஓட்டம்

மூணாறு, ஜூலை.07-

மூணாறு அருகே மாட்டுப்பட்டி அணையில் பாராகிளைடிங் சோதனை ஓட்டம் நடைபெற்றது.தென்னகத்து காஷ்மீர் என்று அழைக்கப்படும் கேரள மாநிலம், மூணாறுக்கு வருகை தரும் சாகச சுற்றுலாப்பயணிகளுக்கு சுற்றுலா துறையின் சார்பில் வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் அரசு கோடிக்கணக்கில் லாபம் ஈட்டி வருகிறது. இந்நிலையில் மூணாறு அருகே உள்ள மாட்டுப்பட்டி அணையில் ஹைடல் சுற்றுலாத்துறையினர் பாராகிளைடிங் என்ற சாகச விளையாட்டை அறிமுகப்படுத்தி உள்ளனர். இதன் ஒரு பகுதியாக, மாட்டுப்பட்டி அணையில் பாராகிளைடிங் சோதனை நடத்தப்பட்டது.

இன்னும் 2 நாட்கள் பல்வேறு காலநிலைகளில் சோதனை நடத்தப்படவுள்ளது. அதன்பிறகு அனைத்து சூழ்நிலைகளும் சாதகமாக இருந்தால் மட்டுமே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், இடுக்கி மாவட்டத்தில் குறிப்பாக நீர்நிலையில் பாராகிளைடிங் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல்முறை என்று ஹைடல் சுற்றுலாத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பா.ம.க., நிர்வாக குழுவில் அன்புமணி நீக்கம்: புதிய குழுவை அறிவித்தார் ராமதாஸ்

சென்னை: ஜூலை.7-

பா.ம.க.,வில் அப்பா மகன் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், இருவரும் கட்சி நிர்வாகிகளை நீக்குவது, புதியவர்களை நியமிப்பது என, போட்டி போட்டு செயல்பட்டு வருகின்றனர். பா.ம.க., பொதுச்செயலர் வடிவேல் ராவணன், பொருளாளர் திலகபாமா உள்ளிட்டோர் அன்பு மணி பக்கம் இருக்கும் நிலையில், அவர்களை நீக்கிவிட்டு, புதியவர்களை ராமதாஸ் நியமித்தார்.

பா.ம.க., எம்.எல்.ஏ.,க்கள் ஐந்து பேரில் ஜி.கே.மணி, அருள் ஆகியோர் ராமதாஸ் பக்கம் உள்ளனர். சிவகுமார், வெங்கடேஸ்வரன், சதாசிவம் ஆகியோர் அன்புமணி பக்கம் உள்ளனர். தனக்கு எதிராக தொடர்ந்து பேசி வந்த சேலம் மேற்கு தொகுதி எம்.எல்.ஏ., அருளை, கடந்த 2ம் தேதி கட்சியிலிருந்து அன்புமணி நீக்கினார்.

இதை ஏற்காத ராமதாஸ், 'பா.ம.க.,விலிருந்து யாரையும் நீக்கும் அதிகாரம் அன்புமணிக்கு இல்லை. இணை பொதுச்செயலர், நிர்வாகக் குழு உறுப்பினர், எம்.எல்.ஏ., ஆகிய பொறுப்புகளில் அருள் தொடர்வார்' என அறிவித்தார். இந்நிலையில், பா.ம.க., புதிய நிர்வாக குழுவை ராமதாஸ் அறிவித்தார். குழுவில் இருந்து அன்புமணியை நீக்கிவிட்டு, 21 புதிய பொறுப்பாளர்களை நியமித்து கட்சியின் நிறுவனர் ராமதாஸ் உத்தரவிட்டுள்ளார்.

ராமதாசுடன், ஜி.கே.மணி, சிவப்பிரகாசம், அருள்மொழி உள்ளிட்டோர் குழுவில் உள்ளனர். தற்போது, பா.ம.க.,வில் மோதல் தீவிரம் அடைந்துள்ளது.



## ராமேசுவரம் கோயிலில் சிருங்கேரி சுவாமிகள் தரிசனம்

ராமேசுவரம், ஜூலை.07-

சிருங்கேரி சாரதா பீடத்தின் ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ விதுசேகர பாரதி சன்னிதானம் சுவாமிகள் ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் நேற்று சிறப்பு பூஜைகள் செய்து, சுவாமி தரிசனம் செய்தார்.

தூளி பாத பூஜை: தமிழகத்தில் விஜய யாத்திரை மேற்கொண்டுள்ள சிருங்கேரி சாரதா பீடம் ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ விதுசேகர பாரதி சன்னிதானம் சுவாமிகள் நேற்று முன்தினம் மாலை ராமே சுவரம் வந்தார். ராமேசுவரம் சிருங்கேரி மடத்தில் தூளி பாத பூஜை செய்த சிருங்கேரி சுவாமிகள், இரவு ராமநாத சுவாமி கோயில் 3ம் பிரகாரத்தில் ஸ்ரீ சாரதா சந்திர மவுலீஸ்வர பூஜையை நடத்தினார்.

நேற்று காலை ராமநாத சுவாமி கோயில் கருவறையில் சிறப்பு பூஜைகள் செய்த சிருங்கேரி சுவாமிகள், ராமநாத சுவாமி, பர்வதவர்த்தினி அம்பாளை தரிசனம் செய்தார். பின்னர் தனுஷ்கோடி சென்ற சிருங்கேரி சுவாமிகள், மணலில் வரையப்பட்ட ராம தனுஷ் உருவத்துக்கு பூஜை செய்து, தனுஷ் கோடி கடலில் சேது ஸ்நானம் செய்தார். இந்த நிகழ்வுகளில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

## பொறியியல் கலந்தாய்வு இன்று தொடங்குகிறது: சிறப்பு பிரிவில் 493 பேர் பங்கேற்கின்றனர்

சென்னை, ஜூலை.07-



இளநிலை பொறியியல் படிப்புகளுக்கான சிறப்புப் பிரிவு கலந்தாய்வு இணைய வழியில் இன்று (ஜூலை 7) தொடங்குகிறது.

தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 417 பொறியியல் கல்லூரிகளில் இளநிலை படிப்புகளுக்கு நடப்பாண்டில் 2 லட்சத்து 41,641 மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்க தகுதிபெற்றனர். இவர்களுக்கான தரவரிசை பட்டியல் கடந்த ஜூன் 27ம் தேதி வெளியானது. அதைத் தொடர்ந்து பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு இன்று (ஜூலை 7) தொடங்குகிறது.

முதலில் மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகள், விளையாட்டுப் பிரிவு மாணவர்கள் ஆகியோருக்கான சிறப்புப் பிரிவு கலந்தாய்வு நடைபெற உள்ளது. இதில் அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவீத ஒதுக்கீட்டில் விண்ணப்பித்தவர்களில் சிறப்புப் பிரிவில் வரும் மாணவர்களுக்கு கலந்தாய்வு இன்றும், நாளையும் நடத்தப்பட உள்ளது. இதில் முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகள் 9 பேரும், மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 128 பேரும், விளையாட்டு பிரிவில் 356 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜூலை 14 முதல் பொதுப்பிரிவு: மாணவர்கள் இன்று காலை 10 முதல் மாலை 7 மணி வரை விருப்ப இடங்களை தேர்வு செய்யவேண்டும். இவர்களுக்கான தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை இரவு வெளியிடப்படும். அதற்கு மறுநாள் மாலை 5 மணிக்குள் ஒப்புதல் அளித்து மாணவர்கள் உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான் இறுதி ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும். தொடர்ந்து இதர சிறப்புப் பிரிவு மாணவர்களுக்கு ஜூலை 9 முதல் 11ம் தேதி வரை வரை கலந்தாய்வு நடத்தப்படும்.

அதன்பின், பொதுப் பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு ஜூலை 14ல் தொடங்கி ஆகஸ்ட் 19ம் தேதி வரை 3 சுற்றுகளாக நடத்தப்பட உள்ளது. அந்தந்த பிரிவில் வரும் மாணவர்கள் தங்களுக்கான நாட்களில் கலந்தாய்வில் பங்கேற்று இடங்களை தேர்வு செய்யவேண்டும். இதற்கான விரிவான கால அட்டவணை, கலந்தாய்வில் பங்கேற்கும் வழிமுறைகள் உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் https://www.tneaonline.org/ எனும் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நடப்பு கல்வியாண்டில் பிஇ, பிடெக் ஆகிய படிப்புகளில் மொத்தம் 2 லட்சத்து 52,467 இடங்களில் மாணவர்களை சேர்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 20 ஆயிரம் இடங்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடப்பு நிதியாண்டுக்குள் 15 அம்ரித் பாரத் ரயில்களை ஐசிஎஃப் ஆலையில் தயாரிக்க திட்டம்

சென்னை, ஜூலை.07-




ஐசிஎஃப் ஆலையில் இந்த நிதியாண்டுக்குள் 15 அம்ரித் பாரத் ரயில்களை தயாரித்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுதவிர, ஏசி மின்சார ரயில்கள் தயாரிப்பு பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சென்னை ஐசிஎஃப்பில் (இணைப்பு பெட்டி தொழிற்சாலை) பல்வேறு வகைகளில் 73 ஆயிரத்துக்கும் அதிகமான ரயில் பெட்டிகள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. அதிலும், தற்போது வந்தே பாரத் ரயில்கள் தயாரிப்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. தற்போது வரை 88 வந்தே பாரத் ரயில்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. இந்த ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இதற்கிடையில் அனைத்து தரப்பு மக்களும் பயணிக்கும் வகையில், அம்ரித் பாரத் ரயில் (சாதாரண வந்தே பாரத் ரயில்) தயாரிக்க முயற்சி எடுக்கப்பட்டது. அதாவது நீண்ட தூர பயணத்துக்கு பொதுவான வசதிகளுடன் ஏசி அல்லாத அம்ரித் பாரத் ரயில் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி 2 அம்ரித் பாரத் ரயில்கள் தயாரித்து,கடந்த 2023ம் ஆண்டு நவம்பரில் ரயில்வே வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

22 பெட்டிகளை கொண்ட இந்த ரயிலில், ஏசி அல்லாத இருக்கை வசதி பெட்டிகள், தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. மேலும் தனியாக இன்ஜின்கள் இருபுறமும் பொருத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்கான 20 பெட்டிகளும், சரக்கு எடுத்துச்செல்ல 2 பெட்டிகளும் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது நாடு முழுவதும் 3 வழித்தடங்களில் இந்த ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இந்த ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் கிடைத்த வரவேற்பை அடுத்து, 200க்கும் மேற்பட்ட அம்ரித் பாரத் ரயில்களை தயாரிக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்தது. முதல்கட்டமாக, 50 ரயில்களை தயாரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளுடன் இந்த ரயில்கள் தயாரிப்பு பணி வேகமாக நடைபெறுகிறது. ஐசிஎஃப் ஆலையில் நடப்பு நிதியாண்டுக்குள் 15 அம்ரித் பாரத் ரயில்களை தயாரித்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை ஐ.சி.எஃப் அதிகாரிகள் கூறியதாவது: இந்த ஆண்டு இதுவரை 4 அம்ரித் பாரத் ரயில்களை தயாரித்துள்ளோம். நடப்பு நிதியாண்டுக்குள் 15 ரயில்களை தயாரித்து வழங்க திட்டமிட்டு இருக்கிறோம். இந்த ரயிலில் அவசர பிரேக்கிங் அமைப்பு உட்பட 12 முக்கிய வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, மேம்படுத்தப்பட்ட இருக்கை மற்றும் பெர்த்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை வசதி, மொபைல் சார்ஜிங் வசதி, அவசர நிலையில் வெளியே அவசர விளக்கு வசதி உட்பட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி தீவிரம்: சென்னை ஐசிஎஃப் ஆலையில் கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த ஆண்டு ஜூன் வரை தலா 12 பெட்டிகளை கொண்ட 6 ஏசி மின்சார ரயில்கள் தயாரித்து, பல்வேறு ரயில்வே மண்டலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2025 26ம் நிதியாண்டுக்கு மேலும் 8 ஏசி மின்சார ரயில்களை தயாரித்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஐசிஎஃப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

## உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டும்: திமுக நிர்வாகிகளுக்கு முதல்வர் உத்தரவு

சென்னை, ஜூலை.07-

தமிழகத்தில் வரும் 2026ல் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஆளுங்கட்சியான திமுக, தேர்தலை எதிர்கொள்ள முழு வீச்சில் தயாராகி வருகிறது.

இதன் ஒருபகுதியாக 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை ஜூலை 1ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதையடுத்து 3ம் தேதி முதல் வீடுவீடாகச் சென்று புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரிலான திமுக உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை ஆழ்வார்ப்பேட்டை யில் வீடு, வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை பணியை மேற்கொண்டார். அதைத்தொடர்ந்து அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏ.க்கள் முதல் கட்சி உறுப்பினர்கள் வரை அனைவரும் அவரவர் வாக்குச்சாவடிகளில் இருக்கும் வீடுகளுக்குச் சென்று மக்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் 'ஓரணியில் தமிழ்நாடு' பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டு திமுக நிர்வாகிகளிடம் முதல்வர் ஸ்டாலின் நேற்று தொலைபேசி வாயிலாகப் பேசினார். அப்போது அவர்களிடம் உறுப்பினர் சேர்க்கையை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்த பிரச்சார இயக்கமானது 45 நாட்கள் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாட்டுப்பட்டி அணையில் பாராகிளைடிங் சோதனை ஓட்டம்

மூணாறு, ஜூலை.07-

மூணாறு அருகே மாட்டுப்பட்டி அணையில் பாராகிளைடிங் சோதனை ஓட்டம் நடைபெற்றது. தென்னகத்து காஷ்மீர் என்று அழைக்கப்படும் கேரள மாநிலம், மூணாறுக்கு வருகை தரும் சாகச சுற்றுலாப்பயணிகளுக்கு சுற்றுலா துறையின் சார்பில் வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் அரசு கோடிக்கணக்கில் லாபம் ஈட்டி வருகிறது. இந்நிலையில் மூணாறு அருகே உள்ள மாட்டுப்பட்டி அணையில் ஹைடல் சுற்றுலாத்துறையினர் பாராகிளைடிங் என்ற சாகச விளையாட்டை அறிமுகப்படுத்தி உள்ளனர். இதன் ஒரு பகுதியாக, மாட்டுப்பட்டி அணையில் பாராகிளைடிங் சோதனை நடத்தப்பட்டது. இன்னும் 2 நாட்கள் பல்வேறு காலநிலைகளில் சோதனை நடத்தப்படவுள்ளது. அதன்பிறகு அனைத்து சூழ்நிலைகளும் சாதகமாக இருந்தால் மட்டுமே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், இடுக்கி மாவட்டத்தில் குறிப்பாக நீர்நிலையில் பாராகிளைடிங் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல்முறை என்று ஹைடல் சுற்றுலாத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் ஜூலை 12 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை.07-

தமிழகத்தில் இன்று முதல் வரும் 12ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசைக் காற்றில் நிலவும் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் வரும் 11ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 12ம் தேதி சில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று முதல் 9ம் தேதி வரை சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக் கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவில் இருக்கும்.

தென் தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்றும், நாளையும் மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் விண்ட் வொர்த் எஸ்டேட், பந்தலூர், அவலாஞ்சி, பார்வூட், நடுவட்டம் ஆகிய இடங்களில் 3 செமீ, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு, சின்கோனா, வால்பாறை, உபாசி, சோலையாறு, நீலகிரி மாவட்டம் தேவாலா, மேல் பவானி, வூட் பிரையர் எஸ்டேட், கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஆகிய இடங்களில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

## சாத்தூர் பட்டாசு ஆலையில் பயங்கர விபத்து: ஒருவர் உயிரிழப்பு நடந்தது என்ன?

சாத்தூர், ஜூலை.07-



■ சாத்தூர் அருகே கீழத்தாயில்பட்டி பட்டாசு ஆலை வெடிவிபத்தில் விண்ணைத் தொடும் அளவுக்கு எழுந்த புகை.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் நேற்று காலை ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில், ஆலையின் 16 அறைகள் தரைமட்டமாகின. இந்த விபத்தில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார்.

சிவகாசி அருகே திருத்தங்கலை சேர்ந்தவர் கணேசன். இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை சாத்தூர் அருகே உள்ள கீழத்தாயில்பட்டியில் நாக்பூர் மத்திய வெடிபொருள் கட்டுப்பாட்டு துறையின் உரிமம் பெற்று இயங்குகிறது. இங்கு பேன்ஸி ரக பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. 50க்கும் மேற்பட்ட அறைகளில் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் பலர் வெளி மாநிலத்தினர். இவர்கள் ஆலை வளாகத்திலேயே தங்கி பணியாற்றுகின்றனர்.

விடுமுறை தினமான நேற்றும் இந்த ஆலையில் பட்டாசு தயாரிக்கும் பணி நடந்தது. ஓர் அறையில் பேன்சி பட்டாசுகளுக்கான மருந்தை செலுத்தும் போது உராய்வு ஏற்பட்டு திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. அடுத்தடுத்து பட்டாசுகள் வெடித்ததில், 16 அறைகள் வெடித்து சிதறி தரைமட்டமாகின. இந்த விபத்தில் பனையடிப்பட்டியை சேர்ந்த பாலகுருசாமி (47) உயிரிழந்தார். தாயில்பட்டியை சேர்ந்த கண்ணன் (50), ராஜசேகர் (29), படந்தாலை சேர்ந்த ராஜபாண்டி (37), ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்த கமலேஷ்ராம் (28), ராஜேஷ் (20) ஆகியோர் பலத்த காயமடைந்தனர். வெம்பக்கோட்டை, சாத்தூர் தீயணைப்பு நிலைய வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

பாலகுருசாமியின் உடல் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. காயமடைந்த 5 பேரும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில், கண்ணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் தீவிர சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சம்பவ இடத்தில் போலீஸார், வருவாய் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். ஆலை உரிமையாளர் கணேசன், போர்மேன் லோகநாதன் உட்பட 4 பேர் மீது வெம்பக்கோட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்து லோகநாதனை கைது செய்தனர். மற்ற 3 பேரையும் தேடி வருகின்றனர்.

முதல்வர் ரூ.4 லட்சம் நிவாரணம்: முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சாத்தூர் அருகே நடந்த பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4 லட்சமும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ரூ.1 லட்சமும், லேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.







## குழந்தைகள் அறிவியல் மாநாட்டிற்கான மாநில அளவிலான பயிற்சி

சென்னை, ஜூலை.07-

சென்னையில் உள்ள ஐஎம்எஸ்சி எனப்படும் இந்திய கணித மற்றும் அறிவியல் மையமும் தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து குழந்தைகள் அறிவியல் மாநாட்டை 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவமாணவிகளுக்கு ஆண்டு தோறும் நடத்தி வருகிறது. இதையொட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பாளர்களுக்கான இந்த ஆண்டுக்கான மாநில அளவிலான பயிற்சி ஜூலை 5 மற்றும் ஜூலை 6 ஆகிய இரு தினங்கள் சென்னை தரமணியில் உள்ள ஐஎம்எஸ்சி வளாகத்தில் அமைந்துள்ள ராமானுஜன் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. விஞ்ஞானி முனைவர் ஜனகராஜன், விஞ்ஞானி முனைவர் ராமானுஜன், முனைவர் தினகரன், முனைவர் திருநாவுக்கரசு, முனைவர் மோகனா, ராஜா ஆகியோர் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள் குறித்து தங்கள் கருத்துக்களை முதல் நாள் நிகழ்வில் பதிவு செய்தனர். இரண்டாம் நாள் நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர்கள் குழு விவாதத்தில் பங்கு பெற்று தங்கள் குழுவினரின் அறிக்கையை சமர்ப்பித்தனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் முகமது பாதுஷா, மாநில பொருளாளர் சுதாகர், மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், மாநில நிர்வாகிகள் தியாகராஜன், நாராயணன், ஸ்டீபன் நாதன் ஒருங்கிணைப்பாளர் கோகுல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சேவற்கொடியோன், மாவட்ட பொருளாளர் பிரபு ஆகியோர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.



# ஜூலை 9ம் தேதி அகில இந்திய வேலை நிறுத்தம்: தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் பங்கேற்பு

**சிவகாசி, ஜூலை.07–**
ஜூலை 9ம் தேதி நடைபெறும் நாடு தழுவிய வேலை நிறுத்த போராட்டத்தில் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் பங்கேற்பது என உயர்மட்டக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு உள்ளதாக பொதுச்செயலாளர் சுரேஷ் கூறியுள்ளார்.

தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் உயர்மட்டக் குழுக் கூட்டம் மாநிலத் தலைவர் பி.டேவிட் லிவிங்ஸ்டன் தலைமையில் இணைய வழியில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் மாநில ஆட்சிக் குழு உறுப்பினர்கள், மண்டல தலைவர், செயலர்கள் மற்றும் ஜே.ஏ.சி உறுபினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பொதுச்செயலர் சோ.சுரேஷ் கூறியதாவது: நாடு முழுவதும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துதல், தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐ திரும்பப் பெறுதல், 8வது ஊதியக் குழுவை உடனடியாக அமைத்தல், தொகுப்பூதிய முறையை ரத்து செய்து, நிரந்தர பணி நியமனங்கள் மேற்கொள்ளல் உள்ளிட்ட கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்ற வலியுறுத்தி மத்திய, மாநில அரசு ஊழியர் சங்கங்கள், பொதுத்துறை ஊழியர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் சார்பில் ஜூலை 9 நாடு தழுவிய வேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்து உள்ளன.

இந்த, ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஜாக்டோ ஜியோ கலந்து கொள்வது என முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகமும் இதில் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டு உள்ளது. கல்லூரி ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் உயர்கல்வித் துறை செயலரும், கல்லூரிக் கல்வி ஆணையரும், சங்க பொறுப்பாளர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

புதிதாக தொடங்கப்பட்ட கல்லூரி களுக்கு மாற்றுப்பணியில் செல்ல ஆணை வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களில், மாற்றுத்திறனாளிகள், உடல்நலன் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள், 3 மாதங்களில் பணி ஓய்வு பெற உள்ளவர்கள், ஏற்கனவே மாற்றுப் பணி சென்றவர்கள் உள்ளிட்டோரின் மாற்றுப் பணி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளது” என்று சோ.சுரேஷ் கூறினார்.

# கவியருவியில் கொட்டும் தண்ணீர் சுற்றுலா பயணிகள் குளிக்க முதல் அனுமதி

பொள்ளாச்சி, ஜூலை.07–
பொள்ளாச்சியை அடுத்த சுற்றுலா பகுதியில் ஒன்றான ஆழியாருக்கு வரும் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி வால்பாறை செல்லும் சுற்றுலா பயணிகள் பலரும்,கவியருவிக்கு சென்று குளித்து மகிழ்கின்றனர். கடந்த ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பெய்ததால், இந்த ஆண்டில் ஜனவரி இறுதி வரையிலும் தண்ணீர் வரத்து தொடர்ந்திருந்தது.

பின் வெயிலின் தாக்கம் அதிகரித்து வறட்சியால் கவிருவியில் தண்ணீர் வரத்தின்றி வெறும் பாறையானது. இதனால், பிப்ரவரி 3ம் தேதி முதல் கவியருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து பெய்த பருவமழையால், கவியருவியில் தண்ணீர் வரத்து அதிகமானது. சிலநாட்களில் காட்டாற்று வெள்ளபோல்நீர் ஆக்ரோஷமாக ஓடியது. தற்போது மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அவ்வப்போது பருவமழை பெய்து வந்ததாலும், அருவியில் கொட்டும் தண்ணீரின் அளவும் குறைய துவங்கி ரம்மியமாக உள்ளது. இதையடுத்து, சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்க வனத்துறை நடவடிக்கை மேற்கொண்டது. இந்நிலையில், சில மாதத்திற்கு பிறகு கவியருவியில் குளிப்பதற்கான தடை நீக்கப்பட்டு, இன்று (6ம் தேதி) முதல் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது என வனத்துறையினர் தெரிவித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# திருச்செந்தூரில் இன்று மகா கும்பாபிஷேக விழா: தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் குவிந்தனர்

தூத்துக்குடி, ஜூலை.07–
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று (7ம் தேதி) நடைபெறுகிறது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் இருந்து பக்தர்கள் குவிந்துள்ளனர்.



அறுபடை வீடுகளில் 2வது படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருப்பணிகள் நிறைவுபெற்று, கும்பாபிஷேக விழா ஜூன் 26ம் தேதி கணபதி பூஜையுடன் தொடங்கியது. கடந்த 1ம் தேதி மாலையாகசாலை பூஜைகள் தொடங்கின. கரியமாணிக்க விநாயகர், பார்வதி அம்மன், மூலவர், வள்ளி, தெய்வானைக்கு கோயில் உள்புறம் தந்திரி சுப்பிரமணியரு தலைமையிலும், சுவாமி சண்முகர் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கு ராஜகோபுரத்தின் கீழ் உள்ள பிரம்மாண்ட யாகசாலையில் 71 ஹோம குண்டங்கள் அமைத்து, 700 கும்பங்கள் வைக்கப்பட்டு. 96 மூலிகைகள் இடப்பட்டு பிச்சை சிவாச்சாரியார் தலைமையிலும் பூஜைகள் நடைபெற்றன.

திருக்கல்யாண மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் பெருமாளுக்கு தனியாக 5 ஹோம குண்டங்கள் வைத்து, பட்டாச்சாரியார்கள் தலைமையில் யாகசாலை பூஜை தொடங்கியது. இன்று (ஜூலை 7) அதிகாலை 4 மணிக்கு 12ம் கால யாகசாலை பூஜைகள், மகா தீபாராதனை நடைபெறுகின்றன. பின்னர், யாகசாலையில் இருந்து கும்பங்கள் கோயில் கோபுர விமான கலசங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். காலை 6.15 மணிக்கு மேல் 6.50 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

ராஜகோபுர கலசங்கள், மூலவர், வள்ளி, தெய்வானை கலசங்களுக்கு தந்திரி மற்றும் போத்திகளும், சுவாமி சண்முகர் மற்றும் பரிவாரமூர்த்தி கலசங்களுக்கு சிவாச்சாரியார்களும், பெருமாள் கலசங்களுக்கு பட்டாச்சாரியார்களும் புனித நீரால் அபிஷேகம் செய்கின்றனர். கும்பாபிஷேகம் முடிந்தவுடன் ட்ரோன்கள் மூலம் பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகத்தை காண கடற்கரை வரை மட்டுமே பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். எனவே, கும்பாபிஷேகத்தை தங்குதடையின்றி பக்தர்கள் காண்பதற்கு வசதியாக நகரம் முழுவதும் முக்கிய பகுதிகளில் 70 பெரிய எல்இடிதிரைகள் அமைக்கப்பட்டுள்ளன. கும்பாபிஷேக விழாவை காண தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பேருந்துகள் மற்றும் கார், வேன்களில் திருச்செந்தூருக்கு வந்துள்ளனர். திருச்செந்தூர் நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. விழாவையொட்டி ஆயிரக்கணக்கான போலீஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

# 2,299 கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்ப தமிழக அரசு அரசாணை வெளியீடு

சென்னை, ஜூலை.07–
காலியாக உள்ள 2,299 கிராம உதவியாளர் பணியிடங்கள் நிரப்ப வேண்டும் என தமிழக அரசு அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது : வருவாய்துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள கிராம உதவியாளர்களின் பணியிடங்களை சிறப்பு கால முறை ஊதியம் ரூ.11,100 - ரூ.35,100 என்ற ஊதியகட்டின் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்கள் வாரியாக மொத்தம் 2299 பணியிடங்களில் காலியாக உள்ளது.

அதன்படி திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில் 3 ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள 102 கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் மட்டும் நிரப்பிட உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இதற்கான விண்ணப்பிப்போர் இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் 21 வயது நிறைவு செய்து அந்த வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். பணிக்கான விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் சமபந்தப்பட்ட வட்டாட்சியருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளித்து விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

# கீழதாயில்பட்டி பட்டாசு ஆலை வெடிவிபத்து உரிய இழப்பீடு வழங்க தேமுதிக வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.07–
பாதிக்கப்பட்டவர்களுக்கு திமுக அரசு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே கீழதாயில் பட்டியில் உள்ள ஹிந்துஸ்தான் (ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ்) பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்த செய்தி மிகவும் வேதனை அளிக்கிறது. பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்து சுமார் ஒரு மணி நேரமாக வெடித்துச் சிதறி உள்ளது. அருகில் உள்ள பட்டாசு ஆலைக்கும் தீ பரவிய நிலையில் அங்குள்ள பட்டாசுகளும் வெடித்துச் சிதறியுள்ளன.

தேமுதிக சார்பாக விருதுநகர் மாவட்ட கழக செயலாளர் செய்யது காஜா செரிப் மற்றும் கழகத்தினர், சிவகாசி மருத்துவமனைக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறி, மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி பொருட்களை அளிக்க இருக்கிறார்கள். பட்டாசு ஆலையின் உரிமம் ரத்து என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த உரிமம் ரத்து என்பது கண் துடைப்பாக இல்லாமல் இனி வரும் காலங்களில் விருதுநகர் மாவட்டம் மட்டும் இல்லாமல் தமிழ்நாடு முழுவதும் எங்குமே பட்டாசு ஆலை விபத்துக்களோ, உயிர் இழப்புகளோ நடக்காத வண்ணம் அரசு சட்டத்தையும், அரசாணையையும் (GO) பிறப்பிக்க வேண்டும்.

பட்டாசு ஆலைகளில் வெடி விபத்து என்பது விருதுநகர் மாவட்டத்திற்கே ஒரு சாபக் கேடாக உள்ளது. தமிழக அரசு பட்டாசு தொழிற்சாலைக்கு என்று தனிக் கவனம் செலுத்தி தமிழகம் முழுவதும் விபத்துகள் நடக்காத வண்ணம் பாதுகாக்க வேண்டும். அப்பாவி மக்கள் தங்கள் உயிர்களைப் பணையம் வைத்து வாழ்வாதாரத்திற்காக பட்டாசு ஆலைகளில் பணிக்குச் செல்கிறார்கள்.

அவர்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற நிலையில் காப்பீடு (insurance), குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். அதேபோல் பட்டாசு ஆலைகளில் நடக்கும் விபத்துகள் இனிமேலும் நடக்காத வண்ணம் பாதுகாத்துக் கண்காணிக்க வேண்டும்.

மேலும் இறந்தவர்களுக்கும், படுகாயம் அடைந்தவர் களுக்கும் தனியார் பட்டாசு (ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ்) ஆலை உரிமையாளர்கள் மற்றும் தமிழக அரசும் உரிய இழப்பீடு வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். இறந்தவரின் ஆன்மா சாந்தியடையவும், அவரது குடும்பத்திற்கும், உறவினர்களுக் கும் இரங்கலையும், அனுதாபத்தையும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்” என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

# அதிபர் ட்ரம்ப் உடன் மோதல்: அமெரிக்காவில் புதிய கட்சியை தொடங்கிய எலான் மஸ்க்

வாஷிங்டன், ஜூலை.07–
அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மற்றும் தொழிலதிபர் எலான் மஸ்க் இடையே கடந்த மாதம் கருத்து முரண் ஏற்பட்டது. இந்நிலையில், அமெரிக்கா கட்சி என்ற புதிய கட்சியை தற்போது எலான் மஸ்க் தொடங்கியுள்ளார்.

“அமெரிக்க மக்களுக்கு மீண்டும் சுதந்திரத்தை கொடுப்பதற்காக அமெரிக்கா கட்சியை இன்று தொடங்கி உள்ளோம். நமது தேசத்தை வீண் செலவு மற்றும் ஊழல் மூலம் திவால் செய்கின்றனர். இதை பார்க்கும்போது நாம் ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் இல்லாமல் ஒரு கட்சி முறையின் கீழ் தான் வாழ்கிறோம் என்பது தெரிகிறது” என தனது எக்ஸ் தளத்தில் மஸ்க் கூறியுள்ளார்.

முன்னதாக, எக்ஸ் தளத்தில் அமெரிக்க சுதந்திர தினத்தன்று (ஜூலை 4) ‘அமெரிக்க கட்சி’ என்ற புதிய கட்சி தொடங்குவது குறித்து மஸ்க் கேள்வி எழுப்பி இருந்தார். ‘யெஸ்’ அல்லது ‘நோ’ பாணியில் மேற்கொள்ளப்பட்ட இந்த சர்வேயில் சுமார் 12 லட்சத்துக்கும் மேலானவர்கள் பங்கேற்றனர். அதில் 65 சதவீதம் பேர் ‘ஆம்’ என்று பதில் அளித்தனர்.

இதையடுத்து, “இரண்டில் ஒருவருக்கு புதிய அரசியல் கட்சி தொடங்க வேண்டும் என கூறியுள்ளனர். அது நிச்சயம் உங்களுக்கு கிடைக்கும்” என சனிக்கிழமை அன்று மஸ்க் உறுதி அளித்திருந்தார். இந்நிலையில், சொன்னபடி அமெரிக்க கட்சியை தொடங்கி உள்ளார். டொனால்டு ட்ரம்ப் அரசு முன்மொழிந்த ‘பிரமாண்டமான பட்ஜெட்; அழகான பட்ஜெட்’ என்ற மசோதா அமலுக்கு வந்த மறுநாளே அரசியல் கட்சி தொடங்குவேன் என மஸ்க் சொல்லியிருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த மசோதா அண்மையில் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.

மஸ்க் ஸ்ட ட்ரம்ப் நடந்தது என்ன? அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தில் அரசு செலவுகளை குறைக்கும் செயல்திறன் துறையை (டிஓஜிஇ ஞிளிநிணி) தொழிலதிபர் எலான் மஸ்க் கவனித்து வந்தார். ஆனால், அவரது துறையின் பரிந்துரைகள் அமெரிக்க அரசின் பட்ஜெட் மசோதாவில் இடம்பெறவில்லை. மாறாக அதில் வரிச்சலுகைகள், அமெரிக்க ராணுவத்துக்கு கூடுதல் நிதி, மின் வாகனங்களுக்கான மானியம் ரத்து போன்றவை இடம் பெற்றிருந்தன. இதனால் ஏமாற்றம் அடைந்த எலான் மஸ்க் அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தில் இருந்து வெளியேறினார்.



பரஸ்பர தாக்கு: அதன்பின் அதிபர் ட்ரம்ப் செயல்பாடுகள் குறித்து விமர்சிக்கத் தொடங்கினார். “மிகப் பெரிய அருமையான பட்ஜெட்” என கிண்டலடித்த எலான் மஸ்க், பின்னர் இது அருவறுப்பான பட்ஜெட் எனவும் குறிப்பிட்டார். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீது பதவி நீக்க தீர்மானம் கொண்டு வந்து பொறுப்பை துணை அதிபர் ஜே.டி.வான்ஸிடம் ஒப்படைக்க வேண்டும் என சமூக ஊடகத்தில் ஒருவர் தெரிவித்த கருத்துக்கும் ‘ஆமாம்’ என எலான் மஸ்க் பதிவிட்டார்.

“எலான் மஸ்க் நிறுவனங்களுடனான அமெரிக்க அரசின் ஒப்பந்தத்தையும், மானியத்தையும் நிறுத்தினால், அமெரிக்க பட்ஜெட்டில் பல லட்சம் கோடி மிச்சமாகும்” என அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்தார். இதையடுத்து “அதிபர் ட்ரம்ப் நன்றி கெட்டவர். நான் ஆதரவு அளிக்கவில்லை என்றால் அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்ப் ஜெயித்திருக்க முடியாது” என எலான் மஸ்க் கூறினார்.

மேலும், சட்டவிரோத பாலியல் வழக்கில் சிக்கி தற்கொலை செய்துகொண்ட ஜெப்ரி எப்ஸ்டீனுடன் அதிபர் ட்ரம்ப்புக்கு தொடர்பு உள்ளது எனக் கூறி அவருடன், ட்ரம்ப் இருக்கும் பழைய வீடியோ ஒன்றையும் எலான் மஸ்க் பகிர்ந்தார். இதனால் எலான் மஸ்க் மீது வெறுப்படைந்த அதிபர் ட்ரம்ப், “இனிமேல் எலான் மஸ்க் உடன் பேசும் எண்ணம் எனக்கு இல்லை” எனக் கூறினார்.

இதையடுத்து, திடீர் திருப்பமாக எலான் மஸ்க், எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள தகவலில், “அதிபர் ட்ரம்ப் பற்றி கொஞ்சம் அதிகமாக விமர்சித்து விட்டேன், வருந்துகிறேன்” என தெரிவித்தார். அதனை ஏற்றுக் கொள்வது போல், “மஸ்க் வருத்தம் தெரிவித்திருப்பது நன்று. அவர் மீது நான் எந்தக் குறையும் சொல்லப்போவதில்லை. ஆனால் நான் சற்று ஏமாற்றமடைந்தேன்.” என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தென் ஆப்பிரிக்கா செல்ல நேரிடும்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதள பதிவில் “கடையை மூடிவிட்டு தென் ஆப்பிரிக்காவுக்கே திரும்ப செல்ல நேரிடும். வரலாற்றில் அதிக மானியங்களை பெற்ற மனிதர்தான் மஸ்க்” என குறிப்பிட்டிருந்தார். அரசின் ஒப்பந்தங்கள் மற்றும் மானியங்கள் மட்டும் கிடைக்காமல் போயிருந்தால் மஸ்க்கின் நிறுவனங்கள் சரிவை சந்தித்திருக்கும். விண்கலன் ஏவுதல், செயற்கைக்கோள்களை நிறுவுதல் மற்றும் மின்சார கார் உற்பத்தி போன்றவை எப்போதோ முடிவுக்கு வந்து இருக்கும் என ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

மஸ்க் எதிர்வினை: “அனைத்தையும் இப்போதே நிறுத்திக் கொள்ளுங்கள் என நான் சொல்கிறேன். ட்ரம்ப்பின் வரி மசோதா நிறைவேறினால் அடுத்த நாள் அமெரிக்க மக்களின் குரலை பிரதிபலிக்கும் வகையில் குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிக்கு மாற்றாக ‘அமெரிக்கா கட்சி’ தொடங்கப்படும்” என மஸ்க் அப்போது சொல்லியிருந்தார்.

# கோவை அருகே பரபரப்பு ஜீப்பை முட்டித்தள்ள முயன்ற காட்டு யானை: சிசிடிவி காட்சி வைரல்

கோவை, ஜூலை.07–
கோவை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய வனப்பகுதிகளில் காட்டு யானை, காட்டுப்பன்றி, சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் அதிகளவில் உள்ளன. அவை இரவு நேரங்களில் உணவு மற்றும் தண்ணீர் தேடி மலையடிவாரத்தில் உள்ள கிராமங்களுக்குள் நுழைவது வழக்கம். இதனிடையே கடந்த சில நாட்களாக கெம்பனூர், தடாகம் உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது.



இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வனப்பகுதியில் இருந்து வெளியேறிய ஒற்றை ஆண் காட்டு யானை பொம்மனம்பாளையம் கிராமத்திற்குள் புகுந்தது. அக்கிராமத்திற்குள் இரவு முழுவதும் சுற்றித் திரிந்த அந்த யானை, நேற்று அதிகாலை 2.30 மணியளவில் ரவி என்பவர் தோட்டத்திற்குள் சென்றது.

அங்கு சிறிது நேரம் இருந்த அந்த யானை, உணவுதேடி சுற்றித் திரிந்தது. இந்த காட்சிகள் அங்கு பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது. தொடர்ச்சியாக, காட்டு யானைகள் கிராமப்பகு திக்குள் நுழைந்து விளை பயிர்களை மட்டுமின்றி, ரேஷன் அரிசி, கால்நடை தீவனங்கள் உள்ளிட்ட வற்றையும் சாப்பிட்டு வருவதாகவும், காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேபோல கடந்த 3ம் தேதி இரவு வெள்ளியங்கிரி கோயிலுக்கு செல்லும் சாலையில் உள்ள தண்ணீர் பந்தல் என்ற பகுதிக்குள் ஒற்றை ஆண் காட்டு யானை நுழைந்தது. அப்பகுதியில் உள்ள விவசாய தோட்டத்திற்குள் நுழைய முயன்ற யானையை, இரண்டு வாகனங்களில் வந்த வனத்துறையினர் விரட்ட முயன்றனர்.

அப்போது வனப்பகுதியை நோக்கி சென்ற காட்டு யானை திடீரென ஆக்ரோசமாக வந்து வனத்துறை ஜீப்பை முட்டித்தள்ள முயன்றது. இதையடுத்து வனத்துறையினர் ஒலி எழுப்பி யானையை வனப்பகுதிக்குள் விரட்டினர். இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகிறது.



# காளையார்கோவிலில் அறிவியல் மைண்ட்ஸ்பார்க் கொண்டாட்டம்

காளையார் கோவில், ஜூலை.07-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கோலி ஸ்பிரீட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் மைண்ட்ஸ்பார்க் கொண்டாட்டம் நடைபெற்றது. பள்ளியின் முதல்வர் அருட்சகோதரி பிம்லா ஜோஜோ தலைமை வகித்தார். பள்ளியின் தாளாளர் அருட்சகோதரி புல்கேரியா முன்னிலை வகித்தார். ஆசிரியை சுகன்யா வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு அறிவியல் பார்வை அறிவியல் கண்ணோட்டம் அறிவியல் மனப்பான்மை கொண்டவர்களாக மாணவ மாணவிகள் திகழ வேண்டும் எனவும் அறிவியல் மனப்பான்மையை எவ்வாறு வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் படைப்பாற்றல் திறனை அதிகரிக்கச் செய்ய அறிவியல் கண்காட்சிகளும் அறிவியல் ஆய்வுகளும் உறுதுணையாக இருக்கும். குழந்தை விஞ்ஞானிகளை உருவாக்க அனைத்து பள்ளிகளிலும் மாணவ மாணவிகளின் படைப்பாற்றலை காட்சிப்படுத்தும் தளங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றார். சிறப்பு விருந்தினர்களாக பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முனைவர் சூசை ஆரோக்கிய மலர் துணைத்தலைவர் வழக்கறிஞர் நவநீத கிருஷ்ணன் உறுப்பினர் ஆரோக்கிய அருள்ஜோதி சகாயராணி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியை அனன் சியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப் பித்தனர். தமிழ் ஆங்கிலம் கணக்கு அறிவியல் சமூக அறிவியல் என பாடவாரியாக மாணவ மாணவிகளுக்கு தனித்தனியாக அறைகள் ஒதுக்கப்பட்டு மாணவ மாணவிகளின் படைப்பாற்றல் திறனால் உருவாக்கப்பட்ட பல்வேறு மாதிரிகள் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. 1500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் 1000 க்கும் மேற்பட்ட பெற்றோர்களும் பார்த்து வியந்து கண்டு ரசித்தனர். ஆசிரியை கனகமணி நன்றி கூறினார். ஆசிரியப் பெருமக்கள் மாணவ மாணவிகளை சிறப்பாக ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.

# நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம்: மனித நேய மக்கள் கட்சி மாநாட்டில் வலியுறுத்தல்

மதுரை, ஜூலை.07-

உள்ளாட்சிகள் முதல் நாடாளுமன்றம் வரை சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும், வக்பு வாரிய திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, மதுரையில் மனித நேய மக்கள் கட்சி மாநாடு நேற்று நடைபெற்றது. கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா தலைமை வகித்தார். மாநிலப் பொருளாளர் உமர் வரவேற்றார்.



கட்சியின் பொதுச் செயலாளரும், எம்எல்ஏவுமான அப்துல்சமது பேசும்போது, "நாட்டில் படிப்படியாக முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதி நடக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளில் சதி செய்து பிரதிநிதித்துவம் குறைக்கப்படுகிறது. நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கொண்டு வரப்பட வேண்டும்" என்றார்.

மாநாட்டில், தமிழ் மையம் நிறுவனர் ஜெகத் கஸ்பர்ராஜ், ஜோதிமலை இறைப்பணி திருக்கூடம் நிறுவனர் திருவடிக்குடில் சுவாமிகள் ஆகியோர் பேசினர். பேராசிரியர் அருணன், வழக்கறிஞர் ஹென்றிதிபேன், முன்னாள் எம்எல்ஏ முருகவேல் ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, மதுரை பாண்டிகோயில் சந்திப்பு பகுதியிலிருந்து மாநாட்டுத் திடல் வரை பேரணி நடைபெற்றது. மாநிலத் தலைவர் ஜவாஹிருல்லா தலைமை வகித்தார். மாநாட்டுத் திடலை பேரணி அடைந்ததும், அங்கு கட்சிக் கொடியை ஏற்றிவைத்தார். மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

நாடாளுமன்றம், சட்டப்பேரவைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க, அனைத்து அரசியல் கட்சிகளும் கொள்கை முடிவெடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்து, முஸ்லிம்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும், மின்னணு வாக்குப்பதிவு முறையில் வெளிப்படைத் தன்மை இல்லை. இம்முறை தொடர்வது ஜனநாயகத்துக்கு பேராபத்து. எனவே, வாக்குச்சீட்டு முறையைக் கொண்டு வர வேண்டும்.

இஸ்ரேலுக்கு அளித்து வரும் ஆதரவை மத்திய பாஜக அரசு கைவிட்டு, நாட்டில் உள்ள இஸ்ரேலிய நிறுவனங்களை வெளியேற்ற வேண்டும், வக்பு வாரிய திருத்த சட்டத்தை ரத்து செய்ய வேண்டும். சென்னை புழல் சிறையில் விசாரணைக் கைதிகள் மீது தாக்குதல் நடத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, நீண்ட நாள் சிறைவாசிகளுக்கு ஜாமீன் வழங்க வேண்டும். திருப்பரங்குன்றம் மலை மேல் உள்ள சிக்கந்தர் தர்காவைப் பாதுகாக்கவும், அங்கு அடிப்படை வசதிகளைச் செய்து, மலைப் பாதையைச் செப்பனிடவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# பெருங்களத்தூரில் பாரதிய ஜனதா அமைப்புச் சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நல சங்கம் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

## கௌரவ தலைவர் டாக்டர் விஜய தாரணி பங்கேற்பு

தாம்பரம், ஜூலை.07-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் சத்தியமூர்த்தி தெருவில் உள்ள தனியார் மஹாலில் பாரதிய ஜனதா அமைப்புச் சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நல சங்கம் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் மாநிலத் தலைவர் த.கமல கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர்கள் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச் செயலாளர் எம்.சக்திவேல் அனைவரையும் வரவேற்றனர். சிறப்பு அழைப்பாளராக கௌரவ தலைவர் டாக்டர் விஜய தாரணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் பல மாவட்டங்களில் இருந்து பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், வெறிச்சோடிக் காணப்படும் ஒகேனக்கல் சுற்றுலா மையம்.

# மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் 58,000 கனஅடி தண்ணீர் வெளியேற்றம்

மேட்டூர் / தருமபுரி, ஜூலை.07-

மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்றில் விநாடிக்கு 58,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் இரவு விநாடிக்கு 51,401 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 40,500 கனஅடியாகவும், மாலை 50,500 கனஅடியாகவும் பதிவானது. அணைக்கு நீர்வரத்து உயர்ந்துள்ள நிலையில், அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு நேற்று காலை 10 மணிக்கு விநாடிக்கு 50,000 கனஅடியாகவும், மாலை 5 மணிக்கு 58,000 கனஅடியாகவும் அதிகரிக்கப்பட்டது. கால்வாய் பாசனத்துக்கு விநாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 120 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் இருந்தது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 50 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 57 ஆயிரம் கனஅடியாக உயர்ந்தது. கபினி அணையில் இருந்து வரும் நீரின் அளவு மற்றும் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையின் அளவு மாறுபடுவதால் நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. எனினும், நீர்வரத்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் உள்ளதால், அருவி மற்றும் ஆறுகளில் குளிக்க விதிக்கப்பட்டுள்ள தடை நீடிக்கிறது. ஒகேனக்கல்லில் காவல், தீயணைப்புத் துறையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



# மாநிலம் முழுவதும் ஆக.1 முதல் பள்ளி செல்லாத குழந்தைகள் கணக்கெடுப்பு

சென்னை, ஜூலை.07-

தமிழகத்தில் 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா குழந்தைகளை கணக்கெடுக்கும் களப்பணிமாநிலம் முழுவதும் ஆகஸ்ட் 1ம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை: தமிழகத்தில் 2025-26ம் கல்வியாண்டுக்கான பள்ளி செல்லாத குழந்தைகள், இடைநின்ற குழந்தைகளை அடையாளம் காண்பதற்கான கணக்கெடுப்பு பணிகள் ஆகஸ்ட் 1ல் தொடங்கவுள்ளது.

இந்த கணக்கெடுப்பு பணியில் மண்டல மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், சிறப்பு பயிற்றுநர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், இல்லம் தேடிக் கல்வித் திட்ட தன்னார்வலர்கள் உள்ளிட்டோர் ஈடுபட உள்ளனர். இந்த களப்பணியின்போது பள்ளி செல்லாத குழந்தைகளை கண்டறிந்து அதற்கான காரணம் பதிவு செய்யப்பட வேண்டும். அதன்பின் அவர்களை அருகே உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சேர்க்கவும், இதுசார்ந்து பெற்றோர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர இந்தக் களப்பணி தொடர்பாக ஒவ்வொரு கட்டமாக மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள், செயலியில் பதிவேற்றம் செய்தல், மாணவர்களின் வருகைப்பதிவு குறித்து ஆய்வு செய்தல் உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# குடும்ப பிரச்சினையால் விபரீதம்: மனைவியுடன் ரயில் முன் பாய்ந்து ஆர்டிஓ தற்கொலை நடந்தது என்ன?

நாமக்கல், ஜூலை.04-

நாமக்கல் மோகனூர் சாலை கலைவாணி நகரைச் சேர்ந்தவர் சுப்பிரமணியன்(55). இவர் திருச்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலராகப் பணிபுரிந்து வந்தார். இவரது மனைவி பிரமிளா (51). மோகனூர் அருகேயுள்ள ஆண்டாள்புரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்தார். இவர்களது மகள் சம்யுக்தா (25). மகன் ஆதித்யா (21).

இந்நிலையில், நேற்று அதிகாலை நாமக்கல் அருகே வகுரம்பட்டி என்ற இடத்தில் நாமக்கல்கரூர் ரயில்வே தண்டவாளத்தில் சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி பிரமிளா ஆகியோர் உடல் சிதறிய நிலையில் இறந்து கிடந்தனர். தகவலறிந்து வந்த சேலம் ரயில்வே போலீஸார் இருவரின் உடல்களை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். விசாரணையில், குடும்பப் பிரச்சினை காரணமாக தம்பதி ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது. தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தற்கொலை எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லை. தற்கொலை எண்ணம் தோன்றினால் உடனடியாக சினேகா தற்கொலை தடுப்பு உதவி எண்: 044 2464000, மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104, ஐகால் உதவி எண் 02225521111 ஆகியவற்றில் தொடர்புகொள்ளலாம்.



# செங்குன்றத்தில் சிவ சிவ அன்பே சிவம் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற நடத்திய இலவச பொது மருத்துவ முகாமில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

சென்னை, ஜூலை07-

சென்னை செங்குன்றத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சிவ சிவ அன்பே சிவம் அறக்கட்டளை சார்பில் 3வது முறையாக இலவச பொது மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

மருத்துவ முகாமிற்கு அறக்கட்டளை நிறுவன தலைவர் பாலகிருஷ்ணன் கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்தார். இந்த மருத்துவ முகாமில் அப்போலோ மருத்துவமனை சார்பில் சர்க்கரை இரத்த பரிசோதனை, பொது மருத்துவம் ஆகியவை பார்க்கப்பட்டு பொதுமக்களுக்கு இலவச மருந்து மற்றும்ப் மாத்திரை வழங்கப்பட்டன.

மேலும் கண் மருத்துவர்கள் சார்பில் கண் பார்வை குறைபாடு, மாலைக்கண், விழித்திரை பாதிப்பு, கிட்டபார்வை, தூரபார்வை, ஆகிய பாதிப்புகளுக்கு இலவசமாக பரிசோதனை செய்யப்பட்டது. தொடர்ந்து கண் கண்ணாடி அணிய மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு இலவசமாக கண் கண்ணாடி வழங்கப்பட்டது. மேலும் ஆத்ம சார்பில் இயற்கை மருத்துவம், அக்குபஞ்சர், இந்தியன் மருத்துவ அசோசியேஷன் சார்பில் பல் மருத்துவமும் பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த இலவச பொது மற்றும் கண் சிகிச்சை மருத்து முகாமில் தூய்மை பணியார்கள், ஊராட்சி ஊழியர்கள், பொதுமக்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் சிவ சிவ அன்பே சிவம் அறக்கட்டளை செயலாளர் டாக்டர் வனிதா சுப்புராயலு, பொருளாளர் டாக்டர் பிருந்தா மற்றும் நிர்வாகிகள் ரோகினி, லோகேஷ், கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# 25 தொகுதிகளில் தனி கவனம் செலுத்த வேண்டும்: மதிமுக நிர்வாகிகளுக்கு தலைமை உத்தரவு

சென்னை, ஜூலை.07-

சட்டப்பேரவை தேர்தலையொட்டி, 25 தொகுதிகளில் தனி கவனம் செலுத்தி பணிகளை மேற்கொள்ளுமாறு கட்சி நிர்வாகிகளுக்கு மதிமுக தலைமை உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் கடந்த முறையைவிட கூடுதல் தொகுதிகளை கேட்போம் என திமுக கூட்டணி கட்சிகள் தொடர்ந்து கூறிவருவது திமுக தலைமையிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், 'கூட்டணி கட்சியில் இருந்து விலகிவருபவர்களை திமுகவில் சேர்ப்பதில்லை' என்ற கொள்கையில் இருந்து விலகி, மதிமுக நிர்வாகிகளை சமீபத்தில் சேர்த்துக் கொண்டது திமுக. இது மதிமுகவுக்கு மட்டுமின்றி மற்ற கூட்டணி கட்சிகளுக்கும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

ஏற்கெனவே, வைகோவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கப்படாத நிலையில், திமுகவின் இந்த நடவடிக்கை மதிமுக தொண்டர்களிடம் கடும் எதிர்ப்புஅலைகளை ஏற்படுத்தியது. பொதுக்குழு உள்ளிட்ட ஆலோசனை கூட்டங்களில் நிர்வாகிகள் இதை காட்டமாகவே வெளிப்படுத்தினர். எனினும், 'திமுகவுடன் கூட்டணி தொடரும்' என திட்டவட்டமாக தெரிவித்த வைகோ, தொண்டர்களையும் சமாதானம் செய்து வருகிறார்.

இதற்கிடையே, மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோவை மத்திய அமைச்சராக்கும் முயற்சியில் வைகோ ஈடுபடுவதாக தகவல் பரவியது. இதை உறுதி செய்யும் வகையில், "சில திமுக கூட்டணி கட்சிகள் எங்களோடு பேசி வருகின்றன" என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகனும் தெரிவித்திருந்தார். இதை தொடர்ந்து, சென்னை அறிவாலயத்தில் முதல்வர் ஸ்டாலினை வைகோ கடந்த 2ம் தேதி சந்தித்து, பாஜகவுடன் எந்த பேச்சுவார்த்தையும் இல்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்தார். இந்த நிலையில், 25 தொகுதிகளில் களப்பணிகளை தீவிரப்படுத்துமாறு நிர்வாகிகளுக்கு தலைமை உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மதிமுக நிர்வாகிகள் கூறும்போது, "மதிமுக மாநாடு, மண்டல வாரியான செயல்வீரர்கள் கூட்டம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறோம். இதை தொடர்ந்து, அனைத்து தொகுதிகளிலும் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தை நடத்த உள்ளோம். இதில், 25 தொகுதிகளில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்று தலைமை உத்தரவிட்டுள்ளது. கட்சி அங்கீகாரத்தை பெறும் வகையில் 8 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். அதேநேரம், இந்த விஷயத்தில் இறுதி முடிவை தலைமை எடுக்கும்" என்றனர்.

கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலின்போது திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டமதிமுக, 4 இடங்களில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161